# பால் நிலை சமத்துவமும் நீதியும் - இஸ்லாமிய சமய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

# Gender Equality and Justice – A Study based on Islamic Religious Thoughts

முகம்மது தம்பி முகம்மது றிஸ்வி[1]

***ஆய்வுச் சுருக்கம்***

*பிறப்பின் அடிப்படையில் வருவது ''பால்'' (Sex) என்ற எண்ணக்கருவாகும். அது ஆணையும் பெண்ணையும் குறிக்கிறது. அது சமூகமயமாக்கல் செயற்பாட்டின் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற போது ''பால்நிலை'' (Gender) எனப்படுகிறது. ''பால்நிலை சமத்துவம்'' என்பது ''பால்'' எனும் வேறுபாட்டுக்கு அப்பால் ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்பதைக் குறிக்கின்றது. சமத்துவம், நீதி என்பன இரு வேறுபட்ட பதங்களாகும். சமத்துவம் (Equality) என்பது ஒரு விடயத்தில் எல்லோருக்கும் சம நிலை வழங்கப்படுவதை அல்லது பேனுவதைக்குறிக்கும். நீதி (Justice) என்பது ஒரு விடயம் (சமத்துவம்) பொது விதியாக இருக்கத்தக்கதாக ஆண், பெண் இருபாலாருடைய இயல்பு, உணர்வு, தண்மை, அமைப்பு, பண்பு, குணம் போன்ற வேறுபாடுகளுக்கு ஏற்ப, அவரவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகை, சட்டம், அனுமதி, தடை எனலாம். பால்நிலை சமத்துவம் மற்றும் நீதி பற்றிய உரையாடல்கள் அண்மைக் காலங்களாக ஊடகங்கள், கருத்தரங்குகளில் பேசு பொருளாக மாறியுள்ளன. குறிப்பாக இஸ்லாத்தில் இருபால்நிலை சமத்துவம், நீதி, உரிமைகள், சுதந்திரம் பற்றிய கருத்தாடல்களைக் குறிப்பிடலாம். இலங்கையில் கூட இவை போன்ற விடயங்கள் விவாதத்துக் குள்ளாக்கபட்டு வருகின்றன. இந் நிலையில் இஸ்லாத்தின் இரு பால் சமத்துவம் மற்றும் நீதி பற்றிய பொதுவான சிந்தனைகளை அல்குர்ஆன், அல் ஹதீஸிலிருந்து வெளிக்கொணருவதும், குறிப்பாக விவாக விவாகரத்து விடயத்தில் இஸ்லாம் முன்வைக்கின்ற பால்நிலை சமத்துவம், நீதி பற்றிய கருத்துக்களை ஆராய்வதுமே இவ் ஆய்வின் நோக்கங்களாகும். இஸ்லாத்தின் பால் நிலை சமத்துவம்,நீதி பற்றிய கருத்தியல்கள், குறிப்பாக விவாக, விவாகரத்து விடயத்திலுள்ள சமத்துவம், நீதி குறித்து எழுந்துள்ள கீழைத்தேய ஆய்வாளர்களின் தவறான புரிதல்கள் நியாயமானவையா? இஸ்லாம் பெண்களைத் தாழ்த்தியும் ஆண்களை உயர்நிலைப்படுத்தியும் பாரக்கின்றதா? என்பன இங்கு ஆய்வுப்பிரச்சினைகளாகும். இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம்,நீதி குறித்த கருத்தியல்கள் இரு பாலாரின் அனைத்து செயற்பாடுகளிளும் அவாவி நிற்கின்ற போதிலும் குறிப்பிட்ட இரண்டு விடயங்களை மாத்திரம் இவ் ஆய்வு வரையறுத்துள்ளது. இஸ்லாம் இருபாலாரையும் சமமாகவும் நீதியாகவும் நோக்குகிறது என்பதுடன் ஆண், பெண் என்ற பால் வேறுபாடு உயர் நிலை, தாழ் நிலை குறியீடல்ல. மாறாக இருபாலாரும் சமபாதி, சரிபாதி என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும் என்பதை நிறுவுவதற்காக இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களான அல் குர்ஆன், அல்ஹதீஸ் கிரந்தங்களை முதந்தர தரவுகளாகவும் இவைபற்றி எழுதப்பட்டுள்ள சில நூல்கள், கட்டுரைகளை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு பன்புசார் ஆய்வு முறைமையைக் கையாண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம், நீதி பற்றிய பார்வை நேர்மையானதும் தெளிவானதும் என்பதை முடிவாக இங்கு இக்கட்டுரை ஆதாரபூர்வமாக முன்வைக்கிறது.*

***திறவுச் சொற்கள்:*** *பால், பால்நிலை, சமத்துவம், நீதி, கீழைத்தேய ஆய்வு*

[1] சிரேஷ்ட விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
மின்னஞ்சல்::rizvimtm@esn.ac.lk

**அறிமுகம்**

இறைவனிடத்தில் ஒருவரின் அந்தஸ்தை தீர்மானிப்பதில் ஆண் - பெண் என்ற பால் (Sex) வேறுபாடு செல்வாக்குச் செலுத்துவதில்லை. (அல்குர்ஆன் அத்:04 வசனம்:124). குறிப்பிட்ட இக்கருத்தானது பால்நிலை சமத்துவம், நீதி தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டை புரிந்து கொள்வதற்கான அடிப்படையாகும். இஸ்லாமிய கோட்பாட்டின் படி ஆணும் பெண்ணும் இறைவனிடத்தில் சரிசமமான அந்தஸ்தையுடையவர்களாவர். (அல்குர்ஆன் அத்:17 வசனம்:70).

பொதுவாக இஸ்லாத்தை விமர்சிக்கும் கீழைத்தேய ஆய்வாளர்கள் (Oriantalists), கீழைத்தேய ஆய்வு என்ற பொதுவெளியில் குறிப்பாக இஸ்லமிய அரங்கில் முகாமிட்டு இஸ்லாத்தை அகலமாக கற்று,அனுகி அதில் சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி வருகின்றனர். கீழைத்தேய ஆய்வு என்பது கீழைத்தேய நாடுகளின் இனம், மொழி, வரலாறு, கலாசாரம், மதம் போன்ற விடயங்களில் நடத்தும் ஆய்வை குறிக்கும். குறிப்பாக இஸ்லாமிய நம்பிக்கைகள் அதன் நாகரீகம், வழிபாடுகள், வரலாறு, அதன் கலைகள், அரபு மொழி போன்றவற்றில் அதிகமான ஆய்வுகளை கிழைத்தேய ஆய்வாளர்கள் மேற்கொண்டு தம் தவரான புரிதலூடாக பல்வேறு பிழையான விமர்சனங்களை முன்தைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை La Conquered du Monde Musliman எனும் கட்டுரையில் La Chatelar என்ற கீழைத்தேய ஆய்வாளர் ஒருவர் இப்படி எழுதுகிறார்

''முஸ்லிம்கள் இஸ்லாத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பலவீனமடையச் செய்வதில் நமது பிரச்சாரகர்கள் தோல்வி கண்டுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. இருந்த போதிலும் மேற்கத்தேய மொழிகள் வாயிலாக கருத்துக்களை முஸ்லிம்கள் மத்தியில் பரப்புவதாலும், ஐரோப்பாவில் வெளியிடப்படுகின்ற நூல்கள்,சஞ்சிகைகள் என்பவற்றோடு முஸ்லிம்களை இணைப்பதனாலும் மேற்குலகத்தோடு சங்கமிக்கச் செய்யலாம். அது முஸ்லிம்களை லோகாயுத துறையில் முன்னேற வழிகோழும். அப்போதே இது வரை முஸ்லிம்களின் தனித்துவத்தை பாதுகாத்த இஸ்லாமிய கோட் பாடுகளையும் கருத்துக்களையும் சீர்குலைக்க முடியும். நமது இலட்சியத்தில் நாம் வெற்றி காணமுடியும்''

இக்கருத்து இஸ்லாமிய கருத்தியல்கள் மீதான பொதுவான கால்புணர்வை வெளிப்படுத்துவதோடு, உண்மைகளை மறைக்க முயற்சிக்கும் செயற்பாடுமாகும். எனவே குறிப்பிட்ட இவ் ஆய்வுத் தலைப்பில் உண்மைகளை கண்டறிந்து குறிப்பாக இஸ்லாமிய கருத்தியல்கள், சிந்தனைகளின் அடிப்படையில் பால்நிலை சமத்துவம் நீதி பற்றி வெளிப்படுத்த இவ் ஆய்வு முயற்சிக்கிறது.

அமைதி, கட்டுப்பாடு, சமாதானம் என்ற கருத்துடைய ''இஸ்லாம்'' என்ற மார்க்கம் பின்வரும் நான்கு விடயங்களை தெளிவாக முன்வைக்கிறது. ஒன்று தெளிவான கொள்கை - மனித நம்பிக்கையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை தெளிவாக பேசுகிறது. இரண்டு மிகச்சரியான வாழ்வொழுங்கு - மனித

சமூகத்துக்குத்தேவையான அனைத்தையும், எப்படியும் வாழ்வதல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என வழிகாட்டுகிறது. மூன்று உலக சமூக ஐக்கியம் மற்றும் சகோதரத்துவம் - ஒன்றித்து கூட்டாக வாழத்தூண்டும் அதே நேரம் சகவாழ்வு, நல்லிணக்கம், கருத்துச் சுதந்திரம், சகிப்புத் தண்மை, மனித சமத்துவம், மனித சகோதரத்துவம் பற்றி தெளிவாக பேசுகிறது. நான்கு வாழும் நாகரிக சிந்தனைகளை முன்வைக்கிறது - காலத்தால் மாறுபடும் சிந்தனைகளையோ, காலத்துக்குப் பொருத்தமற்ற கருத்துக்களையோ அது முன்வைக்க வில்லை. எங்கும், எப்பொழுதும், எவரும் பின்பற்றத்தக்க வாழும் நாகரிகத்தை முன்வைக்கிறது.

இவ் வகையில் பொதுவானதும், பொருத்தமானதுமான தத்துவங்களை முன்வைக்கும் இஸ்லாத்தின் இரு பால் சமத்துவம்,நீதி பற்றிய சிந்தனைகளை இவ் ஆய்வில் முன்வைக்கிறேன். குறிப்பாக இஸ்லாதின் தவராகப்புரியப்பட்டுள்ள கருத்தியல்களுள் பால் நிலை சமத்துவம், நீதி என்ற எண்ணக்கரு பற்றியும், அதனுல் விவாக விவாகரத்து தொடர்பிலுள்ள தவரான புரிதல்களையும் சரிபடுத்தும் வகையிலான ஓர் ஆய்வு முயற்சியாக இதனை மேற் கொண்டுள்ளேன்.

**ஆய்வு நோக்கம்**

- இரு பால் நிலை சமத்துவம், நீதி பற்றிய பொதுவான இஸ்லாத்தின் கருத்தியல்களை அல்குர்ஆன், அல் ஹதீஸிலிருந்து வெளிக்கொணருவது.
- குறிப்பாக விவாக, விவாகரத்து விடயத்தில் இஸ்லாம் முன்வைக்கின்ற பால்நிலை சமத்துவம், நீதி பற்றிய கருத்துக்களை ஆராய்வது.

**ஆய்வுப்பிரச்சினை**

- இஸ்லாம் பெண்களைத் தாழ்த்தியும் ஆண்களை உயர்நிலைப்படுத்தியும் பார்க்கின்றதா
- பால் நிலை சமத்துவம், நீதி பற்றிய இஸ்லாத்தின் கருத்தியல்கள், குறிப்பாக விவாக விவாகரத்து விடயத்திலுள்ள சமத்துவம், நீதி குறித்து எழுந்துள்ள தவரான புரிதல்கள் நியாயமானவையா.

**ஆய்வு முறைமை**

இவ்வாய்வு ஆண், பெண் என்ற இரு பால் நிலை சமத்துவம் நீதி பற்றியும் இஸ்லாத்தில் அவர்களுக்குறிய அந்தஸ்து பற்றியும் குறிப்பாக திருமணம்,விவாகரத்து விடயங்களில் உள்ள பால் நிலை சமத்துவம்,நீதி குறித்தும் பேசமுனைகின்ற ஆய்வுக் கட்டுரையாகும். பண்பு சார் ஆய்வு முறை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன். முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் இவ்வாய்வில் பயன் படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக: அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக: இஸ்லாமிய நூல்கள், இத்தலைப்பு தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகள், இணையவழிக் கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான

பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாத்தின் ஆண், பெண் சமத்துவம் நீதி குறித்த தெளிவான விளங்கங்களை இங்கு இவ்ஆய்வு முன்வைக்கிறது.

**ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடலும்**

சர்வதேச அரங்கில் அண்மைக்காலமாக பெண்ணிலைவாதக் கருத்துக்கள் கீழைத்தேயவாதிகளால் முடுக்கிவிடப்பட்டு கூர்மையடைந்துள்ளமை இஸ்லாமிய பால்நிலை சமத்துவம் மற்றும் நீதி பற்றிய கருத்தியல்களுக்கு சவால்விடும் நிலை தேன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருபால் சமத்துவம், நீதி குறித்த கீழ் வரும் தெளிவான கலந்துரையாடல்கள் இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம், நீதிபற்றிய தெளிவை தருவதுடன், அது குறித்த பிறரது தப்பபிப் பிராயங்களுக்கும் விடையாகவும் அமைகிறது.

பால்நிலை சமத்துவம் குறித்து விரிவுரைகள் நிகழ்த்தும் சந்தர்பங்களில் மாணவர்களை நோக்கி நான் சில கேள்விகள் கேட்பதுண்டு. அதாவது இஸ்லாத்தின் பெண்களின் அந்தஸ்து,முக்கியத்துவம் அல்லது அவர்களது கடமைகள்,பணிகள் பற்றி விஷேட தலைப்பிட்டு பெண்கள் பற்றி பேசும் அளவுக்கு, ஆண்கள் குறித்து இப்படித்தலைப்பிட்டு பேசப்படுவது மிகக்குறைவே ஏன்? எனக் கேட்பேன். அதற்கு பல்வேறுபட்ட விடைகள் மாணவர்களிடமிருந்து கிடைக்கும். அவ்விடைகள் சில நியாயமானதாகவும் சில பொது நியாயமற்றும் காணப்படும். பதில்களின் தன்மைகள் எப்படி இருந்த போதிலும் அதனுல் உற்பொதிந்துள்ள தெளிவான உண்மை என்னவெனில் இந்தக் கேள்வி தோன்றுவதற்கு அல் குர்ஆனோ, நபிமொழிகளோ காரணமல்ல. மாறாக மனித சிந்தனைச் சிக்கள்களின் விளைவாகும்.

கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி (ரஹ்) அவர்கள் மனித சிந்தனைகளின் எல்லை மீறிய பார்வைகள் ஒரு புரத்தில் பெண்களை ஒரு போகப் பொருளாகவும், ஆண்களின் அடிமைகளாகவும் சித்தரிக் கின்றது. மற்றொரு புரம் ஆண்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி இதற்கெள்ளாம் ஆண் ஆதிக்க மரபுதான் காரணம் எனக் கூறி இரு பால் ஆண், பெண் வித்தியாசத்தை இல்லமல் செய்கின்ற ஒரு பார்வையும் தேன்றியுள்ளது எனக் குறிப்பிடுகிறார்.

இஸ்லாம் இவ்விரண்டு நிலைப்பாடுகளையும் தாண்டி ஆணையும்,பெண்ணையும் சமத்துவமாகப் பார்க்கிறது. அவரவர்களுக்குறிய உரிமைகள், கடமைகள், சமத்துவம், நீதி இவைகளை தெளிவாக முன்வைக்கிறது. இவ் ஆய்வுக்கட்டுரையானது இரண்டு தலைப்புகளின் கீழ் தெளிவுபடுத்த முனைகிறது. ஒன்று பெண்கள் பற்றி தவரான பதிவுகள் யாவை? இரண்டு இஸ்லாத்தில் இருபால் சமத்துவம் நீதி அதாவது ஆணும் பெண்ணும் சமம் என்பதன் புரிதல் என்ன?

## 1. பெண்கள் பற்றிய சில தவறான புரிதல்கள்

பொதுவாக ஆண்களை உயர்நிலைப்படுத்தியும் பெண்களை தாழ் நிலைப்படுத்தியும் கீழைத்தேயவாதிகள் எழுதுவதுண்டு. ஆதம், ஏவால் (ஹவ்வா) சுவனத்திலிருந்து இறைவனால் வெளியேற்றப்படுவதற்கு காரணமே ஏவால் தான், பெண்கள் ஆண்களின் அடிமைகள்,பெண்களை ஆள்பவர்கள் ஆண்களே, பெண்கள் அபசகுணம், பீடை, சாபம், அவர்கள் துரதிஷ்ட வாளிகள், பெண்களே அதிகம் நரகவாதிகள், ஷாத்தானின் தோழர்கள், மாத விடாய் நோவினை என்பது இறைவனின் சோதனை, பெண்கள் உலக அழங்காரம், புத்தி குறைந்தவர்கள், அவர்களது ஆலோசனைகள் ஏற்கப்படலாகாது, பெண் தலைமைத்துவம் புறக்கனிக்கப்படல் வேண்டும், இஸ்லாமிய சமயம் கூட பெண்களை மதிக்கவில்லை, அவர்களது உரிமைகளை வழங்கவில்லை. இஸ்லாம் பெண்களை கொடுமைப்படுத்துகிறது, இஸ்லாத்தில் பெண்களுக்கு சுதந்திரமில்லை போன்ற பல தப்பபிராயங்களை பெண்கள் தொடர்பாகவும், இஸ்லாம் தொடர்பாகவும் முன்வைக்கப் படுவதை காணமுடீகிறது. இவைகள் தவரான கருத்தியல்களாகும். அதற்கான தெளிவினை இவ்ஆய்வு தரும் எனக் கருதுகிறேன்.

## 2. இஸ்லாத்தில் இருபால் சமத்துவம், நீதி பற்றிய சிந்தனைகள்

### 2.1. ஆண்,பெண் இருபால் சமத்துவம், நீதி பற்றிய அல் குர்ஆன், அல்ஹதீஸ்களின் பொதுவான கருத்துக்கள்

“நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், முஸ்லிம்களான பெண்களும் விசுவாசிகளான ஆண்களும் விசுவாசிகளான பெண்களும் அல்லாஹ்வுக்கு வழிபாடு செய்பவர்களான ஆண்களும், வழிபாடு செய்பவர்களான பெண்களும் உண்மையே கூறுபவர்களான ஆண்களும், உண்மையே கூறுபவர்களான பெண்களும் பொறுமையாளர்களான ஆண்களும் பொறுமையாளர்களான பெண்களும் உள்ளச்சத்தோடு அல்லாஹ்வை பயந்து நடக்கும் ஆண்களும் உள்ளச்சத்தோடு அல்லாஹ்வை பயந்து நடக்கும் பெண்களும், தானம் செய்பவர்களான ஆண்களும், தானம் செய்வர்களான பெண்களும், நோன்பு நோற்பவர்களான ஆண்களும், நோன்பு நோற்பவர்களான பெண்களும். தங்கள் வெட்கஸ்தலங்களை காத்துக் கொள்பவர்களான ஆண்களும், வெட்கஸ் தலங்களை காத்துக் கொள்பவர்களான பெண்களும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவர்களான ஆண்களும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவர்களான பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான்” (அத்தியாயம்:33 வசனம்:35)

இவ் அல்குர்ஆன் வசனம் ஆணும் பெண்ணும் இறைவனிடத்தில் சரிசமமான அந்தஸ்தையே பெற்றுள்ளனர் என்பதையும், இருபாலாரும் சமமான மார்க்கக் கடமைகளைப் பெற்றுள்ளார்கள் என்பதையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் காட்டுவதை அறியலாம். அல்லாஹ்வுக்கு வழிபடுதல், உண்மை பேசுதல், பொறுமையாக இருத்தல், அல்லாஹ்வுக்குப் பயந்து நடத்தல், தான தர்மம் வழங்குதல், நோன்பு நோற்றல், அந்தரங்க உறுப்புகளை பாதுகாத்துக் கொள்ளுதல் என்ற ஒழுக்க,

பண்பாடு சார் வழியுறுத்தல்கள் யாவும் இருபாலாரையும் சாரும். இங்கு ஆன்மீக வழிபாடுகளின் எல்லா அம்சங்களிலும் பால்நிலைச் சமத்துவம் நீதி பேணப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் பால் நிலை சமத்துவம்,நீதி பற்றிய எண்ணக்கருவை விரிவாக புரிந்து கொள்ளவும் ஆணும் பெண்ணும் இஸ்லாதின் பார்வையில் சமம் என்பதை அறிந்து கொள்ளவும் அல் குர்ஆன் ஆண்,பெண் இருபாலாரும் அல்லாஹ்வின் பிரதிநிதி (கலீபதுல்லாஹ்) என அறிமுகம் செய்கின்றமை, அல்குர்ஆன் அவர்களை சமமாக விளிக்கின்றமை, இருபாலாரும் ஒரே மூலத்தின் படைப்புகள் என குறிப்பிடுகின்றமை, இருவரும் பாவம் செய்யக் கூடியவர்கள், இருபாலாரும் ஒழுக்கவியல் கடமை களையுடையவர்கள், நற் கூலியும் வெகுமதியும் ஆண் பெண் இருபாலாருக்கும் சமம், இருபாலாரும் ஒருவருக்கொருவர் உதவியாளர்கள், இருபாலாருக்கும் வழிபாட்டுக் கடமைகளில் சமத்துவம், நீதி, இருபாலாரிலும் அல்லாஹூவின் ரூஹே (ஆன்மா/உயிர்) ஊதப்பட்டுள்ளமை, ஆணின் தவருக்கு பெண்ணோ, பெண்ணின் தவருக்கு ஆணோ பொறுப்போ, காரணமோ அல்ல, இரு பாலாருக்குமே அவரவர்களுடைய செயல்களுக்கு கூலி உண்டு, கூலியோ தண்டனையோ இரு பாலாருக்கும் விதி விலக்கு அல்ல. இரு பாலாரையுமே இறைவன் கண்ணியப் படுத்துவதாக கூறுகிறமை. இரு பாலாருமே மனித நலன்களில் உறுத்துடையோர் போன்ற கீழ்வரும் அல்குர்ஆனின் பல கோட்பாடுகளிலிருந்து இருபால் சமத்துவ மற்றும் நீதி பற்றிய கருத்தியலை இங்கு அறிய முடிகிறது. இஸ்லாம் ஆணையும்,பெண்ணையும் சமமாகப் பார்க்கிறது,அதன் சமத்துவ மற்றும் நீதியான பார்வை எப்படி அமைந்துள்ளது என்பதை பின்வரும் ஆதாரங்களிளிருந்து அறிய முடிகிறது.

### 2.1.1. ஆண், பெண் இருபாலாரும் அல்லாஹ்வின் பிரதிநிதிகளாவர்

''அல்லாஹ் ஆண், பெண் இருவரையும் தனது <u>பிரதிநிதியாகவே</u> படைத்துள்ளான்.'' அல் குர்ஆன் அத்தியாயம்:02,வசனம்:30. இருவரையும் தனது பிரதிநிதிகள் என்றவகையில் கௌரவப் படுத்தியுள்ளான். ''நிச்சயமாக நாம் <u>ஆதமின் சந்ததியினரை</u> கண்ணியப்படுத்தினோம், நாம் படைத்த பலவற்றை விடவும் அவர்களை மேன்மையாக்கினோம்.'' (அல் குர்ஆன் அத்தியாயம்:17 வசனம்:70)

இங்கு பிரதிநிதி (கலீபா), ஆதமின் சந்ததி (பனு ஆதம்) என்பது வெறுமனே ஆண்களை மாத்திரம் குறிக்கவில்லை. ஆணையும் பெண்ணையும் உள்ளடக்கிய ஒரு சமூகத்தையே இது குறிக்கின்றது. பெண்களை அல்லாஹ் தவிர்த்துவிட்டு சமூகத்தை நோக்கவில்லை என்பதற்கு இது ஒரு சான்றாக உள்ளது. ஆண்களைப் போலவே அல்லாஹ்விடத்தில் பெண்களும் முக்கியமானவர்கள். ஆண்களைப் போன்று பெண்களும் நன்மைக்கு வெகுமதியும் தீமைக்குத் தண்டனையும் பெறுவர்.

இருபாலாரும் மனிதத் தரத்தில் சமமானவர்கள். கடமை, உரிமையில் உள்ள வேறுபாடுகள் இருபாலினரும் அல்லாஹ்விடத்தில் சமமானவர்கள் என்பதைப் பாதிப்பதில்லை. ''உங்களில் ஆண்,பெண் இருபாலாரிலும் எவர் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கி விட மாட்டேன் ஏனெனில் கூலி கொடுப்பதில் ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லை'' (அல் குர்ஆன் அத்தியாயம்: 03 வசனம்:195) அல்லாஹ் தன் வெகுமதியை இரு வருக்குமே வாக்களிக்கின்றான்.

''ஆண் அல்லது பெண் அவர் விசுவாசங் கொண்டவராக இருக்க, யார் நற்செயலைச் செய்தாரோ. நிச்சயமாக நாம் அவரை நல்ல வாழ்க்கையாக வாழச்செய்வோம். இன்னும் நிச்சயமாக அவர்களுக்கு அவர்களது கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிக அழகானதைக் கொண்டு நாம் கொடுப்போம்'' (அல் குர்ஆன் அத்தியாயம்:16 வசனம்:97)

இங்கு இறைவிசுவாசி என்பது ஆணாகவும் இருக்கலாம்,பெண்ணாகவும் இருக்கலாம். இதிலிருந்து இஸ்லாத்தில் ஒருவருக்கான சிறப்பு, அவர் ஆணாக இருப்பதாலோ, அல்லது பெண்ணாக இருப் பதாலோ வருவதில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

### 2.1.2. ஆண், பெண் இருபாலாரும் அல் குர் ஆனில் சமமாக விளிக்கப்படுகின்றனர்

பெண்ணை அல்குர்ஆன் நேரடியாகவே விளிக்கின்றது. எந்த ஒரு இடத்திலும் ஆண்களை முகவர்களாகக் காட்டி அவர்களின் வழியாகப் பெண்கள் விழிக்கப்படவில்லை. இஸ்லாத்தின் பால் நிலைச் சமத்துவம் பற்றிய அணுகு முறையை அறிவதற்கான இன்னுமொரு அடிப்படையாக இதனைக் கொள்ளலாம்.

இஸ்லாத்தில் ஆண்களும், பெண்களும் இறைவனுக்குக் கட்டுப்படுவதற்காகவும், இறைவனை வணங்குவதற்காகவுமே படைக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தத்தமக்குள்ள கடப்பாடுகளுக்கு இறைவனிடமே பொறுப்புச் சொல்ல வேண்டும். இதனால் தான் கலாநிதி துறாபி பெண்ணை ஒரு சுதந்திரமான அங்கமாக காண்கின்றார். மேலும் இஸ்லாத்தில் பெண்ணுக்குரிய இடம் மிகவும் வெளிப்படையானது. மானிடம் என்றவகையில் ஆண்களுக்கும் பெண்களுக்கு மிடையில் எந்த அந்தஸ்து வித்தியாசமும் கிடையாது என்பார், ''இது ஒரு வெளிப்படையான உண்மையாகும். ஆகையினால்தான் ஆணாக இருப்பது உயர்ந்தது, பெண்ணாக இருப்பது தாழ்ந்தது என்பது முற்றிலும் தவரான கருத்தியலாகும். காலாகாலமாக ஆண்கள் தம்மை உயர்வானவர் களாயும், பெண்களை இரண்டாம் தர படைப்புகளாயும் கருதி நடத்தி வந்தமை, வருகின்றமை எமது கண்மூடித்தனமான சமூக விழுமியங்கள், மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்ததே அன்றி இஸ்லாத்தின் அடிப்படையில் அமைந்ததல்ல என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்''.என அறிஞர் இப்ராஹிம் அமீனி குறிப்பிடுகிறார்.

அல்குர்ஆனில் கணவன், மனைவி தொடர்பான விடயங்களில் எந்த இடத்திலும் கணவன் மனைவியென்று பிரித்துக் குறிப்பிடப்படவில்லை. மாறாக சோடிகள் (அஸ்வாஜ்) உங்களில் ஒருவர், அல்லது மற்றவர் என்றே குறிப்பிடுகின்றது. பொதுவாக சோடி என்பது ஒன்றைப் போல் மற்றொன்று என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. சோடியில் ஒன்று இல்லாமல் போகும்போது மற்றையதும் பூரணமற்றுப் போகின்றது. எனவே அல்குர்ஆன் குறிப்பிடும் 'அஸ்வாஜ்' எனும் அரபுப் பிரயோகம் ஆண்-பெண் உறவு என்பது ஒருவரை ஒருவர் பூர்த்தி செய்யும் உறவாகவே அமைய வேண்டும் என உறுதிப்படுத்துகின்றது.

யாரும் யாரிடத்திலும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் அல்ல என்பதையும் தன்னிடத்தில் சமமானவர்கள் என்பதையும் அல்லாஹ் இவ்விதமே நுணுக்கமாக வெளிப்படுத்தியிருக்கின்றான். கணவன் என்று குறிப்பிட்டு அதனை உயர்வாகவோ, அல்லது மனைவி என்பதை குறிப்பிட்டு அதனை அதற்கு அடுத்த படியாகவோ அல்லாஹ் குறிப்பிட்டிருக்கலாம். ஏற்றத் தாழ்வுகளுக்கு வழிகோலாத வகையில் இருவரையும் தனது படைப்பாகவே அல்லாஹ் விளிக்கின்றான். இருவரையும் வெவ்வேறு காரணயங்களுக்காக வெவ்வேறு இடங்களில் சிறப்பித்தும் கூறியுள்ளான். ஒருவருக்கு வழங்கப்பட்ட இந்த சிறப்பு மற்றவருக்கு எதிராகவோ, மற்றவருக்கு சவாலாகவோ வழங்கப்பட்டதல்ல. இஸ்லாத் தின் பால்நிலைச் சமத்துவத்தை குறிக்கும் மற்றுமோர் அடிப்படையாக இது அமைகின்றது.

### 2.1.3. ஆண் பெண் இருபாலாரும் ஒரே மூலத்திலிருந்து படைக்கப்பட்டவர்கள்

ஆணையும் பெண்ணையும் ஒரே மூலத்திலிருந்து படைத்ததாக அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது. “அவன் எத்தகையோன் என்றால் உங்களை (யாவரையும்) ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். இன்னும் அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான். இன்னும் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும் பெண்களையும் பரவச்செய்தான். (அல் குர்ஆன் அத்தியாயம்: 04 வசனம்: 01)

இந்த இடத்தில் ஆண்களையும் பெண்களையும் ஒரே மூலத்திலிருந்தே படைத்திருப்பதாக இறைவன் குறிப்பிடுகின்றான். படைப்பு என்ற வகையில் ஆண், பெண் இருவரும் சமமானவர்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. ஆணை ஒரு மூலத்திலிருந்தும் பெண்ணை வேறு ஒரு மூலத்திலிருந்தும் இறைவன் படைத்ததாக நம்பப்படும் தொன்மத்தை குர்ஆனின் கருத்து செல்லுபடியற்றதாக்குகின்றது. ஆணும் பெண்ணும் ஒரே ஆத்மாவிலிருந்து உருவாக்கப்பட்டார்கள் என்பதே அல்குர்ஆனின் நிலைப்பாடாகும். ஆனால் சிலர் பெண் ஆணின் விலாவிலிருந்து உருவாக்கப்பட்டதாக கூறுவர் இது பைபிளின் கருத்தாகும் ஆனால் அல் குர்ஆன் எங்குமே அப்படிக் கூறவில்லை என வஹீதுத்தீன் கான் தனது இஸ்லாமிய ஷரீஅத்தில் பெண்களின் நிலை என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

அவர்கள் இருபாலாருடைய உடலில் இருப்பது இறைவனின் ஒரே உயிராகும், வெவ்வேரானதல்ல.ஆனால் சிலர் ஆணின் விலாவிலிருந்து பெண் உருவாக்கப்பட்டதாக கூறுவர், ஆனால் அல்குர்ஆன் எங்குமே அப்படி குறிப்பிடவில்லை.

### 2.1.4. ஆண், பெண் இருவருமே தவறு செய்யக் கூடியவர்கள்

பெண்கள் பாவத்தில் தள்ளிவிடுபவர்கள், குறைந்த அந்தஸ்தை உடையவர்கள் அதனால்தான் அல்லாஹ் அவர்களைத் தாழ்த்தி வைத்திருக்கின்றான் என்பது காலாகாலமாக இருந்து வருகின்ற மூடநம்பிக்கையாகும். ஆதம் (அலை) அவர்களை ஹவ்வா (அலை) அவர்களே பாவம் செய்யத் தூண்டியதாக கூறப்படுகின்றது. ஆனால், இது இஸ்லாத்திற்கு முற்றிலும் மாற்றமான கருத்தாகும்.

முதல் மனிதர்களான ஆதம், ஹவ்வா (ஆதம்,ஏவால்) இருவரையும் இறைவன் படைத்து, சுவனத்தில் வாழுமாறு பணித்து,சுவனத்தின் சகல இன்பங்களையும் அனுபவிக்க அனுமதி வழங்கி,அங்கிருந்த ஒரே ஒரு மரத்தை மாத்திரம் நெருங்க வேண்டாம் எனக்கட்டளையிட்டு, அக்கட்டளையை மீறிய

அவ்விருவரும் சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டு இவ் உலகிற்கு அனுப்பப்பட்ட சம்வத்தை, ஹவ்வாவே அத்தவரை செய்வதற்கு காரணமாகவும், ஆதமையும் வழிகெடுத்க ஷாத்தானுக்கு துணையாகவும் இருந்தாள் என்று தப்பபிப்பிராயம் கூறுவதுண்டு. ஆனால் அல்குர்ஆன் ஹவ்வா என்ற பெண் மாத்திரம் புரிந்த தவராக அதனை வெளிப்படுத்தவில்லை. ஆதம் மற்றும் ஹவ்வா இருவரையும் இறைவன் படைத்து, சுவன வாழ்வை அனுபவிக்க வைத்து, குறிப்பிட்ட இறை கட்டளைக்கு அவ்விருவருமே மாறு செய்து, கடைசியில் இறைவனிடம் மன்னிப்புக்கோறியது வரை அவ்விரு பாலாருமே காரணம் என கூறுகிறது. இதனை அல்குர்ஆனின் அத்தியாயம்: 07 வசனங்கள்: 19-27 தெளிவாக ஆணின் தவருக்கு பெண்ணோ,பெண்ணின் தவருக்கு ஆணோ பொறுப்போ, காரணமோ அல்ல என்பதை இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம் நீதியை உறுதிப்படுத்துகிறது ஆதமும் ஹவ்வாவும் பின்வருமாறு வேண்டியதாகக் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. ‘எங்கள் இறைவனே, எங்களுக்கு நாங்களே அக்கிரமம் செய்துகொண்டோம். எங்களை நீ மன்னித்து எங்களுக்குக் கிருபை செய்யாவிடில், நிச்சயமாக நாங்கள் இழப்பிற்குரியவர்களாகி விடுவோம்.’’ (அல் குர்ஆன் அத்தியாயம்: 07 வசனம்:23.)

மேல் வந்த குர்ஆனிய வசனம் இரண்டு சந்தேகங்களுக்கு விடையளிக்கின்றன. ஒன்று முதல் தப்பு செய்தவள் பெண் என்பதை பொய்ப்பிக்கின்றது. இரண்டாவது, பெண் பாவத்தில் தள்ளி விடக் கூடியவள் என்பதை மறுத்துரைக்கின்றது. அல்லாஹ் ‘‘அவள்’’ என்றோ ‘ஹவ்வா’’ என்றோ, அவர் பாவத்திற்கு தூண்டிவிட்டார் என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை இந்த உண்மை முற்றிலும் திரிபடைந்து. பெண் தவறு செய்தாள் என்றே நம்பப்படுவது இஸ்லாமிய நிலைப்பாடு அல்ல.

இன்று ஆண் முதன்மைச் சிந்தனையால் ஊறிப்போன சமூகம், முதலில் பெண்ணே பாவத்தை தூண்டியதாக கருதும்போது, அல்லாஹ் ஆதம் பாவம் செய்ததாகவும் அதற்காக அவர் மன்னிப்பு கோரியதாகவும் சொல்கின்றான். பெண்ணே பாவத்தை தூண்டுபவள் என்றிருந்திருப்பின் தண்டனை வழங்கும்போதும் ஆணைவிட பெண்ணுக்கு அல்லாஹ் அதிகமான தண்டனையை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் ஆதம் ஹவ்வா இருவருக்கும் பொதுவான ஒரு தண்டனையை வழங்கியதாகவே அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. அல் குர்ஆன் அத்தியாயம்:02 வசனம்:38. ஆதமுடைய சந்ததிகள் அனைவரும் தவறிழைக்கக் கூடியவர்களே.’’ என்ற ஹதீஸ் ஆண் பெண் இருபாலாரும் பாவம் செய்யக் கூடியவர்கள் எனக் கருதுவதே ஏற்புடையதாகும்.

### 2.1.5. ஆண், பெண் இருபாலாருக்கும் ஒழுக்கப் போதனைகள் ஒன்றே

ஆணும் பெண்ணும் ஒழுக்கமாக நடக்க வேண்டும். ஆணினதும் பெண்ணினதும் பார்வை தடுக்கப்பட்ட விடையங்களை நோக்கியதாக இருக்கக் கூடாது. ஆணும் பெண்ணும் நல் லொழுக்கமுள்ளவர்களாக இருந்தால்தான் குடும்பமும் சமூகமும் சிறந்து விளங்கும்.பிற பெண் களுடன் ஆண் குளைந்து நெளிந்து பேசக்கூடாது. அதே போன்று பிற ஆடவர்களுடன் பெண் குளைந்து நெளிந்து பேசக்கூடாது. பிற பெண்களுடன் ஆண் தனித்திருக்கக் கூடாது. அவ்வாறே

பிற ஆடவர்களுடன் பெண் தனித்திருக்கக் கூடாது. ஆணோ பெண்ணோ குடும்பத்துணைக்கு விசுவாசமாக நடக்க வேண்டும் என இஸ்லாம் ஒழுக்க விதிகள் யாவற்றையும் பெண்ணுக்கு மாத்திரமன்றி ஆணுக்கும் பொதுவாகவே வைத்துள்ளது. ‘‘(நபியே) நம்பிக்கையாளர்களான ஆண் களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ் நோக்கியே வைக்கவும்.’’ அல் குர்ஆன் அத்தியாயம்:24 வசனம்:30. ‘‘(நபியே) நம்பிக்கையாளர்களான பெண்களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ் நோக்கியே வைக்கவும்.’’ அல் குர்ஆன் அத்தியாயம்:24 வசனம்:31. பொதுவாக ஆணைக் குறித்தோ அல்லது பெண்ணைக் குறித்தோ மாத்திரம் இங்கு கட்டளையிடாது, பார்வைகளைத் தாழ்த்தும் படி நம்பிக்கை கொண்ட ஆண், பெண் இருவருக்குமே கட்டளையிடப் பட்டுள்ளது. ஒழுக்கத்தையும் ஈமானிய கடப்பாட்டையும் அல்லாஹ் எதுவித விலக்களிப்புக்களும் இன்றி இருபாலாருக்குமே கடமையாக்கியுள்ளான்.

### 2.1.6. நற்கூலியும் வெகுமதியும் இருபாலாருக்கும் சமமே

ஒருவருடைய பால் நிலையை மையமாகக் கொண்டு அல்லாஹ் யாருடைய நன்மை, தீமையையும் தீர்மானிப்பதில்லை. ‘‘உங்களில் ஆண், பெண் இருபாலரிலும் எவர் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கி விடமாட்டேன். ஏன் என்றால், உங்களில் சிலர் மற்ற சிலரில் உள்ளவர்தான்’’அல்குர்ஆன் அத்தியாயம்: 03 வசனம்: 195. ‘‘ஒவ்வோர் ஆத்மாவும் தான் சம்பாதித்த வற்றுக்கு பிணையாக்கப்பட்டதாகும்’’ அல்குர்ஆன் அத்தியாயம்:74 வசனம்:38 ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவரவர் சம்பாதித்த வற்றுக்கு நியாயமான பெறுபேற்றை அல்லாஹ் வைத்திருக்கின்றான்.

இது அல்லாஹ்விடமிருந்து நற்கூலியும் வெகுமதியும் இருவருக்கும் சமநீதியுடன் கிடைக்கும் என்பதை குறிக்கின்றது. இது இஸ்லாத்தில் இருபாலாரும் சம அங்கீகாரமுள்ள பிரதிநிதிகள் என்பதை புரிந்து கொள்வதற்கான ஓர் அணுகுமுறையாகும்.

### 2.1.7. ஆண், பெண் இருபாலாரும் ஒருவருக்கொருவர் உதவியாளர்கள்

நன்மையை ஏவித் தீமையை தடுப்பது ஆண், பெண் இருபாலார் மீதும் கடமையாகும். இந்தப் பணியில் விசுவாசியான ஆண்களும் பெண்களும் தத்தமக்குள் உதவியாளர்களாக இருக்கின்றார்கள். ‘‘விசுவாசங்கொண்ட ஆண்களும் விசுவாசங்கொண்ட பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு உற்ற காரியஸ்த்தர்களாக இருக்கின்றனர்.அவர்கள் பிறரை நன்மையைக் கொண்டு ஏவுகின்றனர். (மார்க்கத்தில் மறுக்கப்பட்ட) தீமையை விட்டும் விலக்குகின்றார்கள். (அல்குர்ஆன் அத்தியாயம்: 09 வசனம்:71.)

இவ்வசனம் சமத்துவத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஆண் தவறு செய்யும் போது பெண் அவனை திருத்தி வழி காட்டுபவளாக இருக்கின்றாள் என்றும் அதே போன்று பெண் தவறு செய்கையில் ஆண் அவளை திருத்தி வழி காட்டுபவனாக இருக்கின்றான் என்றும் இறைவன்

கூறுகின்றான். இங்கு பால்நிலை உயர்வு தாழ்வு ஏதும் இல்லை. ஆணும் பெண்ணும் சம தராதர முடையவர்களே.

மார்க்க ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் எல்லா அம்சங்களிலும் சம அந்தஸ்த்து வழங்கப் பட்டிருக்கிறது. மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதிலும் பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. நபியவர்கள் பெண்களுக்கு ஆண்களுக்குப் போலவே தனியான மார்க்க விளக்க வகுப்புகளை நடாத்தியிருக்கிறார்கள். பெண்களுக்கு பிரத்தியேகமான உபதேசங்களை வழங்கியிருக்கிறார்கள். மார்க்கத்தில் ஏற்படும் சந்தேகங்களை பெண்கள் நேரடியாகவே நபியவர் களிடம் வந்து கேட்டறிந்திருக்கிறார்கள்.எனவே மார்க்கத்தை அறிந்து கொள்வதிலும் பால்நிலை சமத்துவம் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.8. ஆண் பெண் இருபாலாருக்கும் வழிபாட்டுக் கடமைகளில் சமத்துவம்

ஆண், பெண் இரு பாலாருடைய இயல்பு, அமைப்பு, உணர்வு, தண்மை, பண்பு, வேறுபாடுகளுக்கு ஏற்ப சமமான ஆன்மீகக் கடமைகளைப் பெற்றுள்ளனர். பெண்களுக்கு அவர்களுடைய இயல்பு, உணர்வு, உடல், உள நிலைகளுக்கு ஏற்ப சில விசேட சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. அது இரு பால் நீதியாகும். பெண்களது மாத விடாய் காலங்களில் அவர்கள் தொழுவதற்கு, நோன்பு நோற்பதற்கு,கஃபாவை தவாப் செய்வதற்கு,தன் கனவருடன் உடல் உறவில் ஈடுபடுவதற்கு, அல்குர் ஆனை தொடுவதற்கு என பல விடயங்களுக்கு இஸ்லாம் தடை விதித்துள்ளது. இவை போன்ற காரியங்கள் பெண்களுக்கான சலுகைகலாகும். காரணம் இங்கு உடல் தூய்மைக்கு முன்னிலை வழங்குகிறது இஸ்லாம்.

பெண்கள் ஜமாஆத் (கூட்டுத் தொழுகைக்காக) பள்ளிவாயலுக்கு வருவதும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதேயாகும். இருப்பினும் தத்தமது வீடுகளில் அவர்கள் தொழுது கொள்வது மிகச் சிறப்பாகும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். கடமையான தொழுகைகளில் மாத்திரமன்றி உபரியான பெருநாள் தொழுகை, கிரகணத் தொழுகை போன்றவற்றிலும் நபிகளாரின் காலத்தில் பெண்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் வணக்க வழிபாடுகளில் வேறுபாடுகள் இல்லை. இரு பாலாருடைய இயல்பு, அமைப்பு, உணர்வு, தண்மை, பண்பு, வேறுபாடுகளுக்கு ஏற்ப சமமான ஆன்மீகக் கடமைகளைப் பெற்றுள்ளனர் இது பால்நிலை நீதியுமாகும் .

மேலே குறிப்பிட்ட அல்குர்னிய ஆதாரங்கள், இஸ்லாத்தின் பால் நிலை சமத்துவம் நீதி பற்றிய கருத்தியல்களையும், பெண்கள் பற்றிய தப்பபிப்பராயங்களுக்கும் தெளிவான பதிலையும் முன் வைக்கிறது.குறிப்பாக திருமணம்,விவாகரத்து விடயத்தில் இஸ்லாத்தின் சமத்துவ நீதிப்பார்வையை நோக்கின் பின்வரும் தெளிவுகளை பெற முடிகிறது.

## 2.2. இஸ்லாமிய விவாக, விவாகரத்தில் இருபால் சமத்துவம், நீதி

### 2.2.1. இஸ்லாமிய விவாக முறைமையில் இருபால் சமத்துவம், நீதி

இஸ்லாத்தின் விவாக விவாகரத்து குறித்து பல தவரான கருத்தியல்கள் உள்ளன. பெண்களுக்கு தெரிவுச் சுதந்திரமோ, கருத்துச் சுதந்திரமோ இல்லை, கட்டாயத்திருமணம், ஆணாதிக்கம், பாலியல் திருமணம், பலதாரமணம் என்பது ஆண்களுக்கு மட்டுமே பெண்களுக்கு அது தடை, குடும்ப வாழ்வில் பெண் அடிமைத்துவம்,சீதனக் கொடுமை,ஆடைச் சுதந்திரம் இன்மை,கருவரைச் சுதந்திரம் இல்லை,இஸ்லாம் பெண்களை அடிமையாகவே அறிமுகம் செய்கிறது என பல்வேறு பிழையான புரிதல்கள் காணப்படுகின்றன. பொதுவாக இஸ்லாத்தின் பார்வையில் ஒரு முன்மாதிரியான குடும்ப உருவாக்கத்தின் அத்திவாரம் திருமணமாகும். இஸ்லாம் எதிர்பார்க்கும் சமூக அமைப்பில் குடும்பம் பிரதான இடத்தைப் பெறு கின்றது.

அர்குர்ஆன் திருமணத்தை ஆண்-பெண் இருபாலாருக்கிடையில் நடைபெறும் ஒரு வலுவான ஒப் பந்தமாகக் குறிப்பிடுகின்றது. இது இரு சாராருக்கும் சமத்துவ உரிமைகளை உறுதி செய்கின்றது. இந்த ஒப்பந்தம் ஏனைய சிவில் ஒப்பந்தங்களைப் போன்று சுதந்திரமானதும் நீதியானதுமாகும். இதில் இணையும் ஆண்-பெண் இரு தரப்பினரதும் பூரண விருப்பம் இன்றி இந்த ஒப்பந்தம் நிறை வேறாது. எனவேதான் இந்த ஒப்பந்தம் பகிரங்கமாக, பொது மக்கள் மத்தியில் இடம்பெற வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இரகசியங்கள் இங்கு கிடையாது,இதற்கு இரு சாட்சிகள் அவசிய மாகும். திருமணத்தின் நோக்கங்களை இருவரில் ஒருவர் மீறும் போது, ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும் விவாகரத்துப் பெற்றுக்கொள்ளும் உரிமை இருவருக்கும் சமமாகவே உண்டு.

எனவே, திருமண ஒப்பந்தமானது ஒரு பெண் ஆணிடம் தஞ்சமடையும் நிகழ்வோ அல்லது பெண்ணுக்கான முழு அதிகாரங்களையம் ஆணிடம் ஒப்படைக்கும் நிகழ்வோ கிடையாது. திருமண வாழ்வின் அடிப்படைகளாக அன்பு, அமைதி, பரஸ்பரம், புரிந்துணர்வு என்பன உள்ளன. ‘‘இன்னும் நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்கு உங்கள் துணைகளை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே அன்பையும் கருணையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்’’ (அல் குர்ஆன் அத்தியாயம் 30 வசனம்:21.)

கணவன் அல்லது மனைவி என்று குறிப்பிடாமல் துணைகள் எனும் வசனத்தை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. இது இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம், அமைதி பெறுவதையே குறிக் கின்றது. தவிர, ஆண் மாத்திரம் பெண்ணிடம் அமைதி பெறுவதையோ அல்லது பெண் மாத்திரம் ஆணிடம் அமைதி பெறுவதையோ குறிக்கவில்லை.‘‘அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள்’’ (அல் குர்ஆன் அத்தியாயம்: 02 வசனம்:187) இது கணவன் மனைவிக்கும் மனைவி கணவனுக்கும் ஆடையாக இருப்பதான உவமானத்தை அல்குர்ஆன் கூறுகின்றது. இங்கு ஆடை மனிதனின் அத்தியவசியத் தேவைகளில் ஒன்று. இது பாதுகாப்பு மற்றும் கௌவரவம் என்பனவற்றை வழங்குகின்றது. இதேபோன்று, கணவன் மனைவி ஆகிய இருவரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர்களாகவும் ஒருவரையொருவர் பாதுகாப்பவர்களாகவும் கௌவரவமளிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதையே குறிக்

கின்றது. இங்கு, கணவன் மனைவி ஒருவருக்கொருவர் சரிசமமானவர்கள் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

திருமணம் ஏன் எதற்காக அதனை நிறைவேற்ற வேண்டும், அதன் நோக்கங்கள் யாவை என்பதையும் இஸ்லாம் தெளிவுபடுத்துகிறது. திருமணம் இறை கட்டளையும் நபி வழியுமாகும். இவ் உலகில் மனித இனத்தின் இருப்பை அது பாதுகாக்கிறது, சந்ததி விருத்தியடைந்து குடும்பம் விரிவடைகிறது, இரத்த உரவுகள், திருமன வழி உறவுகள் உருவாகிறது, ஒழுக்க விழுமியங்கள் நிலை நாட்டப்படுகிறது, திருமணம் இரு பாலாருக்கும் பெருமை சேர்க்கிறது, வாழ்வில் உற்சாகத்தையும் பொறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகிறது,அன்பு, உள அமைதி, இறையருள் கிடைக்கிறது, ஆயுள் அதிகரிக்கிறது, பாவத்திலிருந்து பாதுகாப்பு கடைப்பதுடன், .வாழ்வு முழமை பெறுகிறது. இவை இருபாலாருக்குமான சம முக்கியத்துவங்களாகும். திருமண வாழ்வு விடயத்தில் இஸ்லாம் முன்வைக்கும் அணைத்து வழிகாட்டல்களும்,ஏவல் விலக்கல்களும் முற்றிலும் இருபாலாருக்குமுரியதாகும்.திருமணத்துக்கான தகுதி விதிகள் யாவும் சமத்துவம் மற்றும் நீதிமிக்கதாகும்.

**மணமக்களின் தகுதிகளும் சமத்துவமும்**

இஸ்லாம் திருமணம் செய்யவிருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சில அடிப்படை தகுதிகள் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. திருமணத்தின் போது, ''ஓர் இறை நம்பிக்கை'' அல் குர்ஆன் அத்தியாயம்: 02 வசனம்: 221 ''ஒழுக்கம்'' அல் குர்ஆன் அத்தியாயம்: 24 வசனம்:03 ஆகிய இரண்டு அடிப்படை தகுதிகள் ஆணிடமும் பெண்ணிடமும் இருக்க வேண்டும் என குர்ஆன் குறிப்பிடுகின்றது. இவ்விரு தகுதிகளும் (ஓர்இறை நம்பிக்கை,ஒழுக்கம்) இருவரிடமும் சமகாலத்தில் அமைதல் வேண்டும்.

**திருமண வயது**

திருமணத்தை இஸ்லாம் பருவ வயதை அடைந்த, புத்தி சுயாதினமுடைய, உடல் உள ஆரோக்கியத்தைப் பெற்ற ஆணுக்கும் பெண்ணுக்கும் அனுமதித்துள்ளது. திருமணத்துக்கான குறிப்பிட்ட வயதை இஸ்லாம் நிச்சயிக்கவில்லை. ஆணோ பெண்ணோ திருமணத்துக்கு தயாரா என்பதை வெறுமனே வயதை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்காது உடலியல், உளவியல் முதிர்ச்சி நிலையை (Maturity) அடிப்படையாக வைத்தே இடம்பெற வேண்டும் என்றே இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

பருவமடைதல் என்பது திருமணத்திற்கான தகுதியோ அல்லது அதனை செய்து கொள்வது கட்டாயம் என்பதற்கான நிலையோ அல்ல. உடல், உள முதிர்ச்சி, அறிவு, பெருளாதர, பொறுப் புணா்வு, குடும்ப வாழ்வின் அர்த்தம், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் என்பன விளங்கும் நிலைக்கு வந்த பிறகு திருமணம் இடம்பெறுவது ஏற்புடையதாகும்.

**திருமணத்தின் முன் மணமக்கள் ஒருவரையொருவா் பார்த்தல்**

திருமணத்தின் முன் திருமண முடிக்கவிருக்கும் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவா் பார்த்தல் அவசியம். இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் திருமணத்தின் முன் ஆண் பெண்ணைப் பார்ப்பதற்கு அனுமதியுள்ளது போலவே பெண் ஆணைப் பார்ப்பதற்கும் அனுமதியுள்ளது. நபித்தோழர் முகீரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''நான் ஒரு பெண்ணை மணமுடித்துக்கொள்ள பேசியிருந்தேன். இதனை அறிந்த நபி முகம்மது (ஸல்), நீர் அப்பெண்ணைப் பார்த்துக் கொள்ளும், ஏனெனில் அது உங்களிருவருக்கிடையில் உவப்பையும், நட்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும் என அறிவுரை பகன்றார்கள்.''(ஆதாரம் சுனன் இப்னு மாஜா 524வது ஹதீஸ்).இஸ்லாம் திருமணத்தின் போது, ஆண் பெண்ணையும் பெண் ஆணையும் ஒருவரை ஒருவர் பார்வையிட்டுக் கொள்ளுமாறு வலியுறுத்துவதற்கூடாக இருபாலாருக்கும் சமத்துவத்தினை வலியுறுத்தியுள்ளதைப் பார்க்கலாம்.

**திருமணத்துக்கான சம்மதம்**

இஸ்லாத்தில் கட்டாய திருமணம் தடைசெய்யப்பட்டதாகும். இஸ்லாமிய திருமண விதிகளுள் மணமகனினதும், மணமகளினதும் விருப்பத்தை அறிவதும், ஒப்புதல் பெறுவதும் அவசியமாகும். இது குறித்து ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு நபிமொழி: ''குடும்பத்தாா் திருமணம் செய்து கொடுக்கும் கன்னி பெண்ணின் விருப்பத்தை அவா்கள் பெற வேண்டுமா?'' என நபியவர்களிடம் நான் கேட்டபோது 'ஆம் பெறத்தான் வேண்டும்'' எனக் கூறினார்கள். (ஆதாரம் சஹீஹுல் புகாரி 4844 வது ஹதீஸ்) அதேபோன்று, திருமணமாகி விவாகரத்தான அல்லது விதவையான பெண்கள் மற்றும் அநாதைப் பெண்கள் தொடர்பிலும் அவர்களது சம்மதம் கட்டாயம் பெறப்படுதல் வேண்டும். (ஆதாரம் அபூதாவூத், பகுதி 3, பக்கம் 25-27). இதன் மூலம் தேவையற்ற பலவந்த திருமணங் களை தவிா்க்கக் கூடியதாக இருக்கும்.

**வலிதாரா்/ பொறுப்பாளா்**

'வலி'' என்பது பெண்ணுக்கு பொறுப்பாக இருக்கும் பெற்றோரை அல்லது அவளது பாதுகாவலர் களைக் குறிக்கும். பொதுவாக பாதுகாவலர் என்பவா், சுயமாக தனது வேலைகளை செய்து கொள்ள முடியாத சிறுவா்கள், சித்த சுவாதீனம் அற்றவா்கள், அனுபவமில்லாத பொறுப்புக்கள் அற்றவா்கள் போன்ற தன் பொறுப்பிலுள்ளவா்களை பராமரிக்க சட்டரீதியாக அதிகாரம் உள்ளவா் ஆவாா்.மேற்சொல்லப்பட்ட வகையினா் ஆணாயினும், பெண்ணாயினும் கட்டாயம் திருமணத்துக்கான பாதுகாவலரைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் அனைத்து அறிஞா்களும் உடன்படுகின்றனா்.

**மஹர் தொகை**

''மஹர்'' திருமணத்தின் போதான பெண்ணின் உரிமையாகும். இது கணவனால் மனைவிக்கு வழங்கப்படும் திருமணக் கொடையாகும்.அதன் தொகையை தீர்மாணிக்கும் உரிமை பெண்ணுக்கு

பூரணமாக உண்டு. ''நீங்கள் (மணம் புரியும்) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக் கொடை) மகிழ்வோடு கொடுத்துவிடுங்கள். அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனம் விரும்பி அவர்கள் உங்களுக்குக் கொடுத்தால் அதை தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்.'' (அல் குர்ஆன் அத்தி யாயம் 04 வசனம்: 04) மணம் முடிக்கும் மணப்பெண்ணுக்குரிய (மஹர்) தொகையை முறைப்படி கொடுத்து விடுங்கள். (அல் குர்ஆன் அத்தியாயம் 04 வசனம்: 24)

**குடும்ப நிர்வாகம்**

இஸ்லாம் கணவனை 'கவ்வாம்'' பராமரிப்பாளன் என்று கூறுகின்றது. **"**ஆண்கள்தான் பெண்களை நிர்வகிக்கக் (கவ்வாம்) கூடியவர்களாக இருக்கின்றார்கள்.'' அல் குர்ஆன் அத்தியாயம் 04 வசனம்:34 உழைத்துக் குடும்பத்தையும் பிள்ளைகளையும் காப்பாற்றும் பொறுப்பு பெண்ணுக்கு கட்டாயமானதல்ல. குடும்பத்தை பராமரிப்பதற்காக கணவன் பலவாறு சிரமப்பட்டு பொருள் சம்பா திக்கின்ற போது, அல்லாஹ் அவனுக்கு ஒருபடி உயர்வை வைத்துள்ளான். இது குடும்ப அலகிற்குள் மட்டுமே. அது பெண்ணின் கௌரவத்தையோ, பெண் செய்யும் நல்லமல்களுக்கான கூலியையோ பாதிப்பதில்லை. அதேநேரம், ''கவ்வாம்'' என்பது அடக்கி வைப்பதையோ, வன்முறையைப் பிரயோகிப்பதையோ குறிப்பதல்ல. பராமரிப்பு ஆணின் பால்நிலைக்கு வழங்கப்பட்ட சிறப்பல்ல, அது அவனது பொறுப்பு. அந்தப் பொறுப்பினை நிறைவேற்றாத ஆணுக்கு அந்தச் சிறப்புக் கிடைப்பதில்லை. ஒரு குடும்பத்தை இருவரும் இணைந்து செலவழித்து காப்பாற்றும் போது கணவன் மனைவி இருவருமே இச்சிறப்பைப் பெறுவார்கள்.

இஸ்லாம் உழைத்து பராமரிக்கும் பொறுப்பை கணவனிடம் கொடுத்த போதும் குடும்ப விவகாரங் களில் இருவரும் மஷூரா - கலந்தாலோசிப்பதன் மூலாம் முடிவுகளை எடுப்பதை வரவேற்கின்றது. ''கவ்வாம்'' என்பதால் குடும்ப நிர்வாகத்தினை ஆண் தன்னிச்சையாக முன்னெடுக்க முடியாது. மனைவியின் ஆலோசனைகளும் பெறப்பட்டு, கூட்டுப் பொறுப்பின் அடிப்படையிலேயே முன்னெடுக் கப்படல் வேண்டும். திருமணம் என்னும் ஒப்பந்தத்தில் ஈடுபட ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை காணப்படுவது போல திருமணத்தின் ஏனைய அம்சங்களிலும் இஸ்லாம் பெண்களுக்கு சம உரிமைகளை வழங்கியுள்ளது. எனினும் சில இறுக்கமான பொருள் கோடல்களாலும், ஆணாதிக்கம் கொண்ட சமூக முறைகளாலும் இவை பெண்களிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளன.இதன் விளைவாக பெண் திருமணத்தின் அனைத்து அம்சங்களிலும் இரண்டாம் தரப் பிரசையாக நடாத்தப்படுகின்றாள். இஸ்லாம் இதனை அனுமதிக்க வில்லை.

**2.2.2.. இஸ்லாமிய விவாகரத்து முறைமையில் இருபால் சமத்துவம், நீதி**

மணவாழ்வில் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சில படிமுறைகளையும் அவை வெற்றியளிக்காத போது விவாகரத்தை செய்து கொள்ளக் கூடிய அனுமதியையும் இஸ்லாம் கணவன் மனைவி இருவருக்கும் வழங்குகின்றது.

ஓர் ஆண் தன் மனைவியுடன் தொடர்ந்து வாழ முடியாத நிலைக்கு வரும்போது, அவளிடத்தில் தலாக் (விவாகரத்து) எனக் கூறி மணபந்தத்திலிருந்து பிரிந்து செல்லும் நிகழ்வு மட்டுமே இஸ்லாமிய விவாகரத்து முறை என பலரால் பிழையாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இஸ்லாம் கூறும் விவாகரத்து முறையானது தலாக் என்பதைத் தவிர குல்உ, பஸ்கு என்ற பிரதான மூன்று வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளதோடு ழிஹார், லிஆன், ஈலாஉ என்ற வேறு சில பிரிவுகளையும் கொண்டுள்ளது. மேலே கூறப்பட்ட தலாக், குல்உ, ழிஹார், லிஆன், ஈலாஉ என்பன இஸ்லாமிய சட்டத்தில் காணப்பட்டாலும் கூட இலங்கையில் பொதுவாக தலாக் மற்றும் குல்உ முறைகளே பின்பற்றப்படுகின்றன.

அ) **தலாக் (விவாகரத்து)**

தலாக் என்னும் விவாகரத்து முறை கணவனுக்குரிய உரிமையாகும். இது ஆணின் புறத்திலிருந்து நிகழ்வதாகும். அல்குர்ஆன் அத்:65 வச: 01. கணவன் நியாயமான காரணங்களுக்காக தன் மனைவியிடமிருந்து பிரிவை நாடும்போது மனைவியை விட்டும் சட்டரீதியாக பிரிந்து கொள்வதற்கான வழிமுறையே தலாக் ஆகும். நிரந்தரமாக பிரிவதாயின் மூன்று போதியகால இடைவெளியில் மூன்று முறை தலாக் சொல்லப்பட வேண்டும். இந்த கால அவகாசம் விவாகரத்தை ஒருதலைப்பட்சமாக அணுகும் ஆண் தன் நிலையினை மாற்றிக் கொள்வதற்கானதாகும்.

மனித உணர்ச்சியின் அடிப்படையில், நிதானமிழந்த நிலையில் ஒருவர் மனைவியை தலாக் சொல்லிவிட முடியும். மீண்டும் அவர் மூன்று மாதகாலம் நிதானமாக யோசித்துப் பார்கும் போது மனமாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அல்லது மூன்று மாத இடைவெளியில் கணவனின் நண்பர்கள், உறவினர்கள் நல்லாலோசனைகளைக் கூறி கணவனின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் உண்டு. இதனால்தான் கால அவகாசம் வழங்காது ஒரேயடியாக மூன்று தலாக்கையும் ஒரே நேரத்தில் சொல்லும் முத்தலாக் முறையை இஸ்லாம் மறுக்கிறது.

மேலும் தலாக் மறைமுகமாகச் சொல்லப்பட முடியாது. இரண்டு சாட்சிகள் முன்னிலையிலேயே சொல்லப்பட வேண்டும். எனவே இதன் மூலம் தலாக் சொல்லாது விட்ட ஒருவர் தலாக் சொல்லியதாகவோ, தலாக் சொல்லிய ஒருவர் தான் தலாக் சொல்லவில்லை என மறுப்பதற்கோ வாய்ப்பில்லை. இவ்வாறு தலாக் சொல்லி விவாகரத்தாகும் வரை மனைவியை தனது வீட்டிலேயே வைத்து கணவன் பராமரிக்க வேண்டும். அதேபோன்று ஒருவர் தன் மனைவி மாதவிடாய் நிலையில் இருக்கும் போது தலாக் சொல்ல முடியாது. (ஸஹீஹ் முஸ்லிம், 183, அல்குர்ஆன் அத்: 65 வச:11)

ஒரு கணவன் தன் மனைவியை தலாக் செய்து விட்டால் அவன் மனைவிக்கு அன்பளிப்பாகக் கொடுத்த மஹரையோ அல்லது ஏனைய பொருட்களையோ திருப்பிக் கேட்க முடியாது. மனைவியாக விரும்பிக் கொடுத்தால் மாத்திரமே பெற்றுக் கொள்ளலாம். இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் உறுதிப்படுத்துகின்றது. 'நீங்கள் ஒரு மனைவிக்குப் பதிலாக வேறு ஒருத்தியை மனைவியாகக் கொண்டு வர நாடினால் நீங்கள் அவளுக்கு பணக்குவியலையே (மஹ்ராக) கொடுத்திருந்தாலும் கூட, அதிலிருந்து கொஞ்சம் கூட திரும்பப் பெறாதீர்கள். நீங்கள் அவதூறு

கூறியும், வெளிப்படையாக கொடுமை இழைத்தும் அதனைத் திரும்பப் பெறுவீர்களா? சந்தேகமின்றி நீங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து இன்பம் துய்த்திருக்கின்றீர்களே, மேலும் அந்த மனைவியர் உங்களிடமிருந்து உறுதியான ஒப்பந்தத்தையும் பெற்றிருக்கின்றார்களே (அவ்வாறிருக்க) அப்பொருளை அவர்களிடமிருந்து எவ்வாறு திரும்பப் பெற முடியும்? " (அல்குர்ஆன் அத்: 4 வச: 20-21)

ஆ) **குல்உ**

கணவன் எவ்வளவு மோசமானவனாக இருந்தாலும் அவரோடுதான் வாழ வேண்டும் என்கின்ற ஓர் இறுக்கமான நடைமுறையை இஸ்லாம் காட்டித் தரவில்லை. தன் மனைவியுடன் வாழ முடியாது என்ற நிலையில் உள்ள ஆணுக்கு வழங்கப்பட்ட தலாக் உரிமை, பெண்ணுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது குல்உ எனப்படுகின்றது. மொழிக் கருத்தில் குல்உ என்பதற்கு களைதல், நீக்குதல் என்பது பொருளாகும். பரிபாசை ரீதியில் மனைவி தன் கணவனோடு வாழ்வதற்கு விரும்பாத சந்தர்ப்பத்தில் மஹரை திருப்பி ஈடாக ஒப்படைத்து விட்டு கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொள்ளும் முறையைக் குறிக்கும். ஒரு பெண் கணவனோடு தொடர்ந்தும் வாழ முடியாத நிலையில் இது இடம்பெறுகின்றது. இது பெண்களுக்கு வழங்கப்பட்ட சமத்துவ உரிமையையே காட்டுகின்றது.

திருமணம் என்பது ஆண் பெண் இருதரப்பு இணைந்து செய்த ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் என்ற அடிப்படையில் ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும் உரிமையும் இருதரப்புக்கும் வழங்கப் பட்டுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் ஈட்டுத் தொகையாக தனக்கு திருமண உடன்படிக்கையின்போது வழங்கப்பட்ட மஹர் தொகையை கணவனிடம் மனைவி ஒப்படைத்துவிட வேண்டும். இதனால், ஆண் தரப்பு பாதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது. கணவன் மனைவியைத் துன்புறுத்தல், உரிய முறையில் தாபரிப்பு செலவுகள் வழங்காதிருத்தல், கணவன் சிறை, வெளிநாட்டுப் பயணம் போன்ற காரணங்களால் மனைவியை மிக நீண்ட நாட்கள் பிரிந்திருத்தல், தீராத நோயாளியாக காணப்படல், ஆண்மைக் குறைபாடு போன்ற ஏதாவது நியாயமான காரணங்களுக்காக ஒரு பெண் குல்உ செய்து கொள்ளக் கோர முடியும். ஆனாலும் காரணம் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

சிலபோது மனைவியின் குல்உ கோரிக்கையை கணவன் நிராகரிக்க முடியும். அப்படி நிராகரித்தாலும் கூட பெண் தரப்பு மஹரை திருப்பி ஒப்படைக்கத் தயார் எனில் காதி நீதிபதி குல்உவை நிறைவேற்றி வைப்பார். ஏனெனில் குல்உவுக்கு கணவனின் அனுமதி அவசியமானதல்ல. கணவனின் அனுமதி அவசியம் என்றிருப்பின் பெண்ணுக்கு குல்உ என்ற தனியான ஒரு உரிமையை வழங்கியதில் அர்த்தமில்லாது போகும். தலாக்கின் போது மனைவியின் அனுமதி கணவனுக்கு அவசியமில்லை என்பது போல குல்உவில் கணவனின் அனுமதி அவசியமானதன்று.என Mohamed Fathi Osman, Muslim Women The Family And The Society எனும் நூலில் குறிப்பிடுகிறார். குல்உ செய்யும் போது, கணவன் தான் மனைவிக்கு வழங்கிய மஹர் தொகையை விட அதிகமாக

எதனையும் கோர முடியாது. ஆனால் மனைவியாக விரும்பி மஹர் தொகையை விட அதிகமாக ஏதாவது வழங்கினால் அதனை கணவன் ஏற்பதில் தவறில்லை. (ஹதீஸ் இப்னு மாஜா 2332)

எடுத்த எடுப்பில், எழுந்தமானமாக விவாரத்தை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. முரன்பாடுகள் படிப்படியாக தீர்க்கப்படல் வேண்டும் ''எந்தப் பெண்கள் விஷயத்தில் அவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் (அதிலும் திருந்தாவிட்டால்), அவர்களைப் படுக்கையிலிருந்து விலக்கிவிடுங்கள் (அதிலும் திருந்தாவிட்டால்),அவர்களை 'ழர்ப்'' செய்யுங்கள்'' (அல் குர்ஆன் அத்தியாயம்: 04 வசனம்:34.)

கணவன் மனைவிக்கிடையே பிணக்குகள் ஏற்படும் போது முதல் கட்டமாக அல்குர்ஆன் நல்லுபதேசத்தை தீர்வாக முன்வைக்கிறது. உபதேசம், நல்ல ஆலோசனை என்பது பலருக்கு பிரயோசனமளிக்க முடியும். இதன் மூலம் அநாவசியமான விவாகரத்துக்களைத் தவிர்க்க முடிகிறது. நல்லுபதேசம் பயனளிக்காதவிடத்து இரண்டாவது தீர்வாக கணவன் மனைவி படுக்கையிலிருந்து பிரிந்திருப்பதை குர்ஆன் பரிந்துரை செய்கின்றது. அதிலும் பலன் கிடைக்காதபோது மூன்றாவது தீர்வாக 'ழர்ப்'' விலகிச் செல்லுதல், அல்லது பிரிந்து செல்லுதல் என்ற தீர்வை முன்வைக்கின்றது. இந்த 'ழர்ப்'' என்ற சொல் பல அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றது. அல்குர்ஆனிலேயே பல அர்த் தங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் மேற்சொன்ன குர்ஆன் வசனத்தை மொழி மாற்றம் செய்கையில் 'அடித்தல்'' என்ற அர்த்தத்தையும் சிலர் பிரயோகிக்கின்றனர்.இக்கருத்தை Mohamed Hasan தனது *Thafseer wa Bayan Mufrathathul Quran* எனும் புத்தகத்தில் தருகிறார்.

மேற் சொன்னதன் படி கணவன் மனைவி தற்காலிகமாகப் பிரிந்துவிட்டால் அதற்கு அல்குர்ஆன் முன்வைக்கும் தீர்வு குடும்ப உறவுகள் சேர்ந்து சமரசம் செய்து வைப்பதாகும். ''(கணவன், மனைவியாகிய) இருவருக்குள் (பிணக்கு ஏற்பட்டு பிரிவினை ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சினால் அவன் உறவினர்களில் ஒருவரையும் அவள் உறவினர்களில் ஒருவரையும் நடுவர்களாக ஏற்படுத்துங்கள்.'' (அல் குர்ஆன் அத்தியாயம்:04 வசனம்:35.)

சமரசத்துக்காக பெண் தரப்பில் ஒருவரையும் ஆண் தரப்பில் ஒருவரையும் நியமித்து பேச்சுவார்த்தை நடாத்தும்படியே கட்டளையிடுகிறது இஸ்லாம். இந்த நான்கு தீர்வுகளினாலும் தீர்த்து வைக்க முடியாத பிரச்சினையாக இருந்தால் மாத்திரமே விவாகரத்தை ஐந்தாவது தீர்வாக முன்வைக்கிறது. இதிலிருந்து இஸ்லாம் விவாகரத்தை ஒரு இறுதிக்கட்டத் தீர்வாக முன்வைத்துள்ளதையும் பால்நிலை நீதியைப் பேண வழிகாட்டுவதையும் அவதானிக்கலாம்.

இங்கு முற்றிலும் மனைவி மட்டுமே தவறு செய்பவள், அவளை விவாகரத்து செய்ய முன் செய்யப்பட வேண்டிய நான்கு படி முறைகள் என்ற அர்த்தத்திலேயே மேற் சொன்ன வசனம் நோக்கப்படுகின்றது. நடைமுறையில் கணவனுக்கு மாறு செய்யும் பெண்களின் விகிதா சாரத்தையும் மனைவிக்கு மாறு செய்யும் கணவர்களின் விகிதாசாரத்தையும் ஒரு கணம் சிந்திப்போமெனில்

மேற்சொன்ன அல்குர்ஆன் வசனம் பெண்களால் பிரயோகிக்கப்படவே அதிக பொருத்தமுடையது என்பதனை யாரும் மறுக்க முடியாது. எனவேதான் கணவன் ஏதும் பிழை செய்தால் மனைவி நேரடியாகவே விவாகரத்தை நாடுவதா? அல்லது கணவன் திருந்தும் வரை மேற்சொன்ன அதே படிமுறைகளை மனைவியும் செய்து விட்டே விவாகரத்தை நாட வேண்டுமா என்னும் விடயங்களை யாரும் கவனிப்பதில்லை. விவாகரத்தின் போது சமத்துவம் பேசும் அல்குர்ஆனின் நோக்கம் நிச்சயமாக பெண்களை பாதிப்பதாக இருக்க முடியாது.

விவாரத்து விடயத்தில் ஆண் ''தலாக்'' என்ற முறைமையை பயன்படுத்துவது போல பெண் ''குல்உ'' என்ற முறைமையை பயன்படுத்த இஸ்லாம் வழிகாட்டும் ஆதே நேரம் ''பஸ்ஹ்'' என்ற விவாகரத்து முறையையும் இஸ்லாமிய சட்டம் முன்வைக்கிறது.அதனை பிரயோகிக்கும் உரிமை காழி நீதிபதிக்கு உண்டு. எனவே திருமண வாழ்க்கையின் பொழுது ஏற்படும் இருபாலாருக்குமிடையிலான முரண்பாட்டுச் சூழலின் பொழுது விவாகரத்து என்ற உரிமையையும் மிகத்தெளிவாக இஸ்லாம் முன்வைப்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம் நீதி பற்றிய கருத்தயில்களையும்,இஸ்லாமிய விவாவக விவாகரத்து விடயங்களில் காணப்படும் நீதி நியாயங்களையும தெள்வாக புரிந்து கொள்ளாதவர்களது தப்பபிப்பிராயங்களுக்கு தெளிவாக பதிலாக இக்கட்டுரை அமைந்திருக்கும் என நம்புகிறேன். இது குறித்து பல் கோண ஆய்களும் கட்டுரைகளும் எழுதப்பட்டிருக்கின்ற போதிலும் அவை ஆண் அல்லது பெண் சார்பு நிலை கொண்டு அணுகப்பட்டிருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இவ் ஆய்வானது இஸ்லாம் இருபாலாரையும் சமத்துவமாகப்பார்க்கும் மார்க்கம் என்பதை நிருவுகிறது. பொதுவாக அல் குர்ஆனிலிருந்தும் நபிமொழிகளிளிருந்தும் இஸ்லாத்தில் ஆண்,பெண் இரு பால் சமத்துவம், நீதி பற்றிய நேரடியான கருத்தியல்களை இக்கட்டுரை முன்வைத்துள்ளதோடு, குறிப்பாக இஸ்லாமிய திருமண முறைமை மற்றும் விவாகரத்து விடயங்களில் காணப்படும் இரு பால் சமத்துவ நடைமுறைகள் பற்றியும் தெளிவுபடுத்துகிறது. கீழைத்தேய ஆய்வுகள் பெண்கள் பற்றி முன்வைக்கும் தவரான விமர்சனங்களை மேலே இவ் ஆய்வில் முன்வைத்து, இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம்,நீதி பற்றிய பார்வை அப்படியானதல்ல அதன் கருத்தியல்கள் நேர்மையானதும் தெளிவானதும் என்பதை முடிவாக இங்கு இக்கட்டுரை ஆதாரபூர்வமாக முன்வைத்துள்ளது.

**பரிந்துரைகள்**

இஸ்லாமிய போதனைகள் குறித்த கீழைத்தேய மற்றும் பலரது விமர்சனங்களுக்கு அப்பால் இஸ்லாத்தின் போதனைகள் தெளிவானவை, உண்மையானவை, நடைமுறைச்சாத்தியமானவை என்பதை எல்லோரும் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்று, ஆக்பூர்வமான கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன்வைக்க வேண்டும். அல் குர்ஆனிய கருத்தியல்களை எந்த மதக் கொள்கை சார்ந்தவராயினும் தாம் தெளிவாக கற்று பிறருக்கு தெளிவாக புரியவைத்தல் வேண்டும்.

ஆணும் பெண்ணும் சம பாதி,சரிபாதி என்பதை உணர்ந்து, பிறருக்கும் உணர்த்தி, இஸ்லாத்துக்கு எதிரான பெண்ணிலை வாத சிந்தனைகளை, தவரான கருத்துக்களை திருத்துதல் அவசியம். பொதுவாக எல்லா மதத்தவர்களும் தத்தமது மதம் பற்றிய அறிவும் தெளிவும் பெற்றிருப்பதுடன், ஏனைய சக மதங்கள் பற்றிய அறிவும் தெளிவும் பெறுவதன் மூலமாக சகிப்புத்தன்மை பேணல், மதங்களுக்கிடையான கலந்துரையாடல்களை மேற்கொண்டு, புரிந்துணர்வைக் கட்டியெழுப்புதல், சந்தேகங்களைத் தவிர்த்து சகவாழ்வை கட்டியெழுப்புதல் காலத்தின் தேவையும் அவசியமுமாகும். புரிதல் பிழையானால் முரண்பாடுகளும், குழப்பங்களும் அதிகரிக்கும் அதனால் சகவாழ்வு, சமத்துவம், சகோதரத்துவம், சகிப்புத்தண்மை அனைத்துமே பாதிக்கப்படும்.எந்தவொரு அறிஞனும், ஆய்வாளனும் புரிதலோடும்,விளக்கத்தோடும் ஒரு மதத்தையோ அதன் கருத்தியல்களையோ பார்க்க,ஆய்வு செய்ய வேண்டுமே தவிர நிகழ்வுகளோடும்,காலப்புணர்வோடும் நோக்கலாகாது. பகுத்தறிவுக்கு ஒரு எல்லை உண்டு  அதனை இறை வேதங்களின் வழியில் நோக்குகின்ற பொழுது முடிவுகள் சரியாக அமையும்.

**உசாத்துணைகள்**


Mohamed Hasan (Nd), *Thafseer wa Bayan Mufrathathul Quran*, Beirut, DR pub.

Sayyad Qutb, (1994), *Fi lilalil Qurqn*, Beirut, Darushshuruq pub.

Muhammad Qutb, (2000), *Islam the Misunderstood Religion* Dilhi, BIP Pub.

www.christianity.about.com/od/faqhelpdesk/a/divorceremarria<2014.09.20>

Mohamed Fathi Osman, (2004), *Muslim Women the Family and The Society*, Omar Ibn AlKhat tab Foundaஅல் குர்ஆன் மொழி பெயர்ப்பு, (2002) சவூதி அரேபியா,மதீனா மன்னர் பஹ்த் குர்ஆனிய அச்சகம்

வஹீதுத்தீன் கான் (2004) *இஸ்லாமிய ஷரீஅத்தில் பெண்களின் நிலை*, சென்னை, இக்ரா பதிப்பகம்.

அக்ரம் அப்துஸ்ஸமது (2017.09.08) கட்டுரை- *பெண் ஒரு சமநிலைப்பார்வை-பெண்பற்றிய சில தவரான மனப்பதிவுகள்* - இணையம்- http/meelparvai.net

ஜாவித் ஜ:.பர் (2017.03.12) கட்டுரை - *கீழைத்தேய வாதம் இஸ்லாத்தின் மீதான கருத்தியல் போர்*

இணையம் - மெய்ப்பொருள் காண்பது அறிவு